# தேர்தல் வாக்குறுதிகள் நிறைவேற்றம்: தமிழ்நாட்டில் இந்தியாவிற்கே முன்னோடியாக செயல்படுத்தப்படும் முத்திரைத் திட்டங்கள் - சொன்னதையும் செய்திருக்கிறோம்; சொல்லாததையும் செய்திருக்கிறோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, செப்.4 –

**தேர்தல் அறிக்கையில் கூறிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டது குறித்தும், இந்தியாவுக்கே முன்னோடியாக தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் முத்திரைத் திட்டங்கள் குறித்தும், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவில், “சொன்னதையும் செய்திருக்கிறோம்; சொல்லாததையும் செய்திருக்கிறோம்” எனக் குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:

தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையில் கூறிய 505 வாக்குறுதிகளில், நமது திராவிட மாடல் அரசு 364 வாக்குறுதிகளை நிறைவேற்றி, 40 வாக்குறுதிகள் பரிசீலனையில் உள்ளதைத் தக்க தரவுகளோடு அமைச்சர்கள் தங்கம் தென்னரசு , எஸ்.எஸ். சிவசங்கர் மற்றும் கோவி.செழியன் ஆகியோர் விளக்கியுள்ளனர்.

இன்னும் ஒருபடி மேலே சொன்னால், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், நான் முதல்வன், புதுமைப்பெண், தமிழ்ப் புதல்வன் போன்ற இந்தியாவுக்கே முன்னோடியாகச் செயல்படுத்தப்படும் முத்திரைத் திட்டங்கள் - தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்படாதவை.

முந்தைய ஆட்சியின் பத்தாண்டுகால நிதி நிர்வாகச் சீர்கேடு, கொரோனா நெருக்கடி, தமிழ்நாட்டை வெல்ல முடியாத ஒன்றிய பா.ஜ.க. வன்ம அரசின் ஓரவஞ்சனை போன்ற தடைகளைக் கடந்து, சொன்ன சொல்லைக் காப்பாற்றியுள்ளோம்!

எளிதில் அணுகும் தன்மை (Accessibility) , பதில் கூறும் பண்பு (Accountability), வெளிப்படைத் தன்மை (Transparency), அனைவரையும் உள்ளடக்கிய நிர்வாகம், (Inclusivity), பொறுப்புணர்வு (Responsibility), நீடித்து நிலைக்கும் தன்மை (Sustainability) இதுதான் தி.மு.க.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### ஆளுநரின் அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்பட்டவை –

# கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்படவில்லை!

## உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு வாதம்!

புதுடெல்லி, செப். 4 –

மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்க கால நிர்ணயம் செய்த தீர்ப்புக்கு எதிராக குடியரசுத் தலைவர் மூலம் ஒன்றிய பாஜக அரசு கேள்வி எழுப்பிய வழக்கு உச்சநீதிமன்றத்தில் நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, தமிழ்நாடு அரசு சார்பில் மூத்த வழக்கறிஞர் அபிஷேக் சிங்வி வாதங்களை முன்வைத்தார்.



ஆளுநர் திருப்பி அனுப்பும் மசோதாவை மீண்டும் நிறைவேற்றி அனுப்பும் அதிகாரம் சட்டப்பேரவைக்கு உள்ளது. அதே போன்று மாறும் சூழ்நிலை, கொள்கை காரணமாக அதனை மீண்டும் நிறைவேற்றாமல் கைவிடும் அதிகாரம் சட்டப்பேரவைக்கே உள்ளது.

ஆட்சி மாற்றம் அல்லது கொள்கை மாற்றம் என்று ஆளுநர் மசோதாவை நிறுத்தி வைக்க அல்லது கைவிட அதிகாரம் இல்லை. ஆளுநர் தனிப்பட்ட முறையில் எந்த மசோதா மீதும் முடிவு எடுக்க முடியாது. ஆளுநர் சூப்பர் முதலமைச்சராக நினைத்து செயல்பட முடியாது.

அரசியல் சாசன பிரிவு 200 ஐ தாண்டிய எந்த அதிகாரமும் ஆளுநருக்கு இல்லை என்று அபிஷேக் சிங்வி வாதிட்டார். ஆளுநர் அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்பட்டவை.

கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்படவில்லை. சட்டமன்றம் கூடாத நேரங்களில் அமைச்சரவை, முதலமைச்சரின் ஆலோசனைப்படி அவசர சட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கும் 213 வது அரசியல் சாசன பிரிவு ஆளுநருக்கு அதிகாரம் வழங்கி உள்ளது என்று தெரிவித்தார்.

ஆளுநருக்கு தனி அதிகாரம் உள்ளது என்ற ஒன்றிய அரசின் வாதத்தை முழுமையாக நிராகரிப்பதாக தமிழ்நாடு அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டது.

நமது அரசியலமைப்பு அத்தகைய தனி அதிகாரங்களுக்கு எதிரானது என்று, அபிஷேக் சிங்வி வாதிட்டார். ஆளுநருக்கு எதிராக வழக்கு தொடர முடியாது என்ற ஒன்றிய அரசின் வாதத்துக்கும் அவர் கடும் எதிர்ப்பு தெரிவித்தார்.

அரசியலமைப்பின் மேலாதிக்கத்தை உறுதி செய்ய உருவாக்கப்பட்ட அமைப்புதான் நீதித்துறை. ஆளுநர் 1,400 நாட்கள் வரை மசோதா மீதான ஒப்புதலை நிறுத்தி வைத்தது தவறு என்று நீதிமன்றம் கூறியுள்ளது.

இந்த விவகாரத்தில் நீதிமன்றம் முழு தீர்வையும் வழங்குவது நீதித்துறையின் உரிமை. அரசியலமைப்பின் மேலாதிக்கத்தை காக்கும் பணியை நீதிமன்றம் செய்து வருகிறது என்று அபிஷேக் சிங்வி தெரிவித்தார்.

### சேலம் மாவட்டத்தில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாமில் பெறப்பட்ட

# அனைத்து மனுக்களுக்கும் தீர்வு காண நடவடிக்கை!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேட்டி!

சேலம், செப். 4 -

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கருக்கல்வாடி, கிருஷ்ணம்புதூர் கே.கே.எம் திருமண மண்டபத்தில் நேற்று முன்தினம் (02.09.2025) நடைபெற்ற ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாமினை சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். இரா. பிருந்தா தேவி, முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்ததாவது:

அவர்களால் “உங்களுடன் ஸ்டாலின்” திட்டம் 15.07.2025 அன்று தொடங்கி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, சேலம் மாவட்டத்தில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம் நடை பெற்றது. ”உங்களுடன் ஸ்டாலின்” திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்தில் 15.07.2025 அன்று முதல் வரும் நவம்பர் மாதம் வரை நகர்ப்புறப்பகுதிகளில் 168 முகாம்களும் மற்றும் ஊரகப் பகுதிகளில் 264 முகாம்களும் என மொத்தம் 432 சிறப்பு முகாம்கள் திட்டமிடப்பட்டு பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு தீர்வுகள் காணப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள கடைக்கோடி மக்கள் அன்றாடம் அணுகும் அரசுத்துறைகளின் சேவைகள் அவர்கள் வசிக்கும் பகுதிக்கு அருகாமையிலேயே சென்று வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். முதலமைச்சர் அவர்கள் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தில் பெறப்படும் மனுக் கள் அனைத்திற்கும் 45 நாட்களுக்குள் தீர்வு காண வேண்டுமென உத்தரவிட்டுள்ளார் . சேலம் மாவட்டத்தில் 15.7.2025 முதல் 30.8.2025 வரை நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம்களில் பல்வேறு துறை களின் சார்பில் மொத்தம் 79,516 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டுள்ளன. இதுதவிர கலைஞர் மகளிர் உரிமைத் தொகை கோரிக்கை விண்ணப்ப மாக மொத்தம் 89,718 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

இதன் தொடர்ச்சியாக, நேற்று முன்தினம் (2.9.2025) சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் மண்டலம் வார்டு - 22 பகுதிக்கு உட்பட்டவர்களுக்கு சிவதாபுரம் கந்தசாமி கவுண்டர் திருமண மண்டபத்திலும், நகர்ப்புறத்தை ஒட்டியுள்ள கிராம ஊராட்சி, கருக்கல்வாடி பகுதிக்கு உட்பட்டவர்களுக்கு கிருஷ்ணம்புதூர் கே.கே.எம் திருமண மண்டபத்திலும், சங்ககிரி நகராட்சி வார்டு 6, 7, 12, 13 க்குட்பட்ட பகுதிகளுக்கு சங்ககிரி சந்தைப்பேட்டை, வார்டு 2, சமுதாய கூடத்திலும், நங்கவள்ளி பேரூராட்சி வார்டு 1, 2, 3, 4, 5, 6, 7 க்குட்பட்ட பகுதிகளுக்கு நங்கவள்ளி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி எதிரில், வார்டு 14, எம். என்.வி திருமண மண்டபத்திலும், வீரபாண்டி ஊராட்சி ஒன்றியம், வேம்படிதாளம் பகுதிக்கு வேம்படிதாளம் ஏ.வி.எம் திருமண மண்டபத்திலும், தலைவாசல் ஊராட்சி ஒன்றியம், மணிவிழுந்தான் பகுதிக்கு ராமானுஜபுரம் சமுதாய கூடத்திலும் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம் நடைபெற்றது.



அந்தவகையில் சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கருக்கல்வாடி, கிருஷ்ணம்புதூர் கே.கே.எம் திருமண மண்டபத்தில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்”திட்ட முகாமினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, முகாமில் பொதுமக்களுக்கு தேவையான குடிநீர் வசதிகள், இருக்கை வசதிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் அமைக்கப்பட்டுள்ளது குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்தார். இந்நிகழ்வின் போது, ஓமலூர் வட்டாட்சியர் ரவிக்குமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.



தேனி மாவட்டம், மேகமலை மணலார் பகுதியில் நேற்று முன்தினம் (02.09.2025) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன் தமிழ்நாட்டில் வளரிளம் பருவத்தில் அதிகமாக கர்ப்பங்கள் நிகழும் 24 வட்டாரங்களில் தெரு நாடகங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் திட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், தங்க தமிழ்செல்வன் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் என்.இராமகிருஷ்ணன் (கம்பம்), ஆ.மகாராஜன் (ஆண்டிபட்டி), கே.எஸ்.சரவணக்குமார் (பெரியகுளம்) ஆகியோர் முன்னிலையில் தொடங்கி வைத்து நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

# திசை மாறுகிறதா தேர்தல் பாதை?

## ‘கணையாழி’ தலையங்கம்!




தேர்தல் பாதை
ஜனநாயகத்துக்கானது!
உலகத்துக்குப் பாசாங்கு காட்ட இல்லை!
தேர்தலில் வெற்றிபெற
முன்பு
மக்களைத் தேடிப் போனவர்கள்
கூட்டணிக்காகக் கட்சிகளைத் தேடியவர்கள்
இப்போது
பேரணி செல்கிறார்கள்
தேர்தல் ஆணையம் நோக்கி!
தேர்தல் வெற்றியைத்
தடுமாறச் செய்திருக்கின்றன
அண்மைக்கால ஊடகச் செய்திகள்!

மக்களையும்
கூட்டணிக் கட்சிகளையும் கடந்து
தேர்தல் வெற்றியைத்
தீர்மானிப்பது தில்லுமுல்லுகளா? என்று
திகைத்து நிற்கிறது தேர்தல் முறை!

சாதி மதக் கட்டுப்பாட்டை மீறி
மக்களுடன் கூட்டணி
கட்சிகளின் கூட்டணி எனும்
காலத் தீர்மானங்களில்
தேர்தல் ஜனநாயகத்தை மீட்க
தேர்தல் ஆணையத்துடனான
கூட்டணியை எதிர்க்கக்
களத்தில் மீண்டும்
கை கொடுக்கிறார் தமிழக முதல்வர்!

ஒருமுறை தவறு என்பது
மனித இயல்பு
தொடர்ந்து செய்வது
விலங்குகள் கூட்டம்!
திருத்த இருக்கிறது அரசு எனும்
நம்பிக்கையில் நடக்கிறது
குடிமக்கள் வாழ்க்கை!

தவறே செய்யாதது
அரசு என்பதில்லை
அரசின் தவறுகளைத்
திருத்த இருப்பது தேர்தல்!

தேர்தல்
உண்மையைக் கண்டுபிடிப்பது இல்லை
பெரும்பான்மையைக் காட்டுவது!
மக்களின் வேறுபட்ட
மனநிலையைச் சொல்வது!

தேர்தல்
வரும் காலத்தை
வடித்தெடுக்கும் சிற்பி!

பெற்ற பெரும்பான்மைக்கும்
மக்களின் விருப்பத்துக்கும்
கால ஓட்டத்தில் உருவாகும்
இடைவெளியால்
அதிகார அரக்கர்களின்
சுய திருத்தத்துக்கு உதவுவது!
அதிகார மையத்தை
விளிம்புக்குத் துரத்துவது!

தேர்தல் என்பது
ஜனநாயகச் சடங்கு இல்லை!
மக்களை மிரட்டும் ஆட்சியை
மக்கள் மிரட்டும் வரம்!
அதிகார மதிப்பிழப்பு!

தங்களுக்குச் சாதகமாகத்
தொகுதியை மாற்றி அமைப்பதும்
வாக்காளர்களை
இடம்பெயரச் செய்வதும்
வாக்குரிமையைப் பறிப்பதும்
இருப்பவர்களுக்கு
மரணச் சீட்டு கொடுப்பதும்
இருந்தும் இல்லாமல்
காணாமல் அடிப்பதும் ஒரு கிராமத்தையே
ஒரே வீட்டில் குடியமர்த்துவதும்
தேர்தல் பாதையைத்
திசை மாற்றுவதாகும்!

வாக்காளர்கள் குறையாமல் இருக்க
மூன்று குழந்தைகளைப்
பெற்றுக்கொள்ளச் சொல்கிறார்கள்!

எங்கே வேலை செய்வது?
யாரைத் திருமணம் செய்வது?
யார் தீர்மானிப்பது?

தனிமனித உரிமையில்
தலையிட யாருக்கு உரிமை?

அப்படியே
எங்கே வாக்களிப்பது
என்பதை யார் தீர்மானிப்பது?
ஜனநாயகத்தில்
வாக்குரிமை என்பது
வாக்காளர் உரிமை இல்லையா?

வாழ்தல் வேண்டி
இடம்பெயர நேர்ந்தவர்கள்
சொந்த ஊரில் வாக்களிக்கும்
பிறந்த ஊர் உரிமையை
இழக்க வேண்டுமா?


கரோனா காலத்தில்
சொந்த ஊர்ப் பாசத்தில்
உயிரைச் சுமந்து
கால்நடையானவர்கள்
வாக்குரிமைக்காகப்
போராட மாட்டார்களா?

தேர்தல் என்பது மக்களின் நம்பிக்கை!
ஜனநாயக நம்பிக்கையை
மதிப்பிழக்கச் செய்யலாமா?

பெறும் வாக்குகளே
வெற்றியைத் தீர்மானிக்க வேண்டும்.
மாலை 5 மணிக்கு
ஒரு புள்ளிவிவரம்
இரவு 11 மணிக்கு
வேறொரு விவரம்
அடுத்தநாள் காலை
மற்றொரு விவரம்
வாக்குப் பதிவில்
ஓர் எண்ணிக்கை
எண்ணும் போது
இன்னொரு எண்ணிக்கை
செய்யறிவு மெய்யறிவாகும் என்று
மனிதர்களை நம்பாமல்
கருவிகளைக் கைக்கொண்டோம்!
இப்போது
கருவிகளுக்கும் பொய் சொல்லக்
கற்றுக் கொடுக்கிறார்கள்
சாத்தானின் சேவகர்கள்!

நம்பப்படுகின்ற
கடவுளுக்கும் கூடத்
தனக்கு
வேண்டியதைச் சாதிக்கத்
தேவைப்படுகிறார்கள்
சாமியாடிகள்!
கடவுளுக்கும் கூட
தேவைப்படுகிறது
சாமியாடிக் கூட்டணி!

சாமியாடிகளின் ஆசையே
கடவுள் விருப்பமாகக்
கட்டமைக்கப்படும் காலம் இது!
அதனால்
திகைப்பில் நிற்கிறார்கள்
பொதுமக்கள்!
திசை மாறுகிறதா
தேர்தல் பாதை?



**-நன்றி:**
**‘கணையாழி’**
**செப்டம்பர் - 2025**

**ம.ரா.**